செ.வெ.எண்: 254 நாள்: 26.04.2025

# புதுக்கோட்டை மாவட்டம்

## பத்திரிகைச் செய்தி

## இ- வாடகை

---

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் வேளாண்மைப் பொறியியல் துறையின் இ-வாடகை திட்டத்தில் உழவர் செயலியின் மூலம் குறைந்த செலவில் வேளாண் கருவிகளை வாடகைக்குப் பெற்று பயன் பெறலாம். இதன் மூலம் தனியாருக்கு அதிக தொகை கொடுத்து வேளாண் கருவிகள் வாங்க இயலாத விவசாயிகள் குறைந்த செலவில் பயன்பெற முடியும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நில மேம்பாட்டு இயந்திரங்கள் மண் தள்ளும் இயந்திரம் ஒரு மணி நேரத்திற்கு ரூ.1230/- க்கும் மற்றும் டிராக்டர் இணைப்புக் கருவிகளான சுழல் கலப்பை 9 கொத்து கலப்பையுடன் ஒரு மணி நேரத்திற்கு ரூ.500/-க்கும் வாடகைக்கு வழங்கப்படுகிறது.

மேலும் டிராக் வகை நெல் அறுவடை இயந்திரம் ஒரு மணி நேரத்திற்கு ரூ.1880/-க்கும் சக்கர வகை மண் அள்ளும் இயந்திரம் ஒரு மணி நேரத்திற்கு ரூ.890/-க்கும் வாகனத்துடன் இயங்ககூடிய தேங்காய் பறிக்கும் இயந்திரம் ஒரு மணி நேரத்திற்கு ரூ.450/-க்கும் சுழல் விசைத்துளைக் கருவி ஒரு மீட்டருக்கு ரூ.130/-க்கும் நிலநீர் ஆய்வு கருவி ஒரு ஆய்விற்கு ரூ.500/-க்கும் வாடகைக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் பயன்பெற பட்டா நிலம் உள்ள விவசாயிகள் உழவர் செயலியில் உள்ள உரிய விவரங்கள் பதிவுகள் செய்து விண்ணப்பித்து பயன்பெறலாம்.

வேளாண் பொறியியல் துறை அலுவலகங்களான உதவி செயற்பொறியாளர் (வே.பொ), திருச்சி மெயின் ரோடு, திருக்கோகர்ணம், புதுக்கோட்டை, கைபேசி எண் 9443405997 என்ற அலுவலகத்தையும், உதவி செயற்பொறியாளர் (வே.பொ), நைனா முகமது கல்லூரி அருகில், இராஜேந்திரபுரம், அறந்தாங்கி, கைபேசி எண் 9500988606 என்ற அலுவலகத்தையும், செயற்பொறியாளர் (வே.பொ), திருச்சி மெயின்ரோடு, திருக்கோகர்ணம், புதுக்கோட்டை, தொலைபேசி எண் 04322 221816 என்ற அலுவலகத்தையும், சிறு குறு விவசாயிகள் அணுகி பயன்பெறலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai